# வைரம் காட்டிய வெளிச்சம்

ஆர்ட் போஸ்ட்



அல்போன்சோ

உலகம் வெளிச்சத்தால் நிரம்பியது. நிழல்களால் நிரம்பியது. நிழலும் வெளிச்சமுமாய்க் கலந்து புரள்கின்றன உருவங்கள். இதையே தன் ஓவியங்களின் அடிப்படையாகக் கொண்டு நவீன ஓவியங்களைப் படைக்கிறார், இந்தியாவின் முக்கிய ஓவியர்களில் ஒருவரான அல்போன்சோ அருள்தாஸ்.

சென்னை ஓவியக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரியும் அல்போன்சோ, தனது ஓவியங்களுக்கான தனி பாணியைக் கண்டுபிடித்த கதை சுவாரஸ்யமானது.

சிறுவயதில் 'கலைடாஸ்கோப்' காட்டும் விளையாட்டில் தன்னை இழந்தவர் இவர். பெங்களூரில் பிறந்த இவர், சர்ச்சுக்குப் போகும்போதெல்லாம் அங்கு பலவண்ணக் கண்ணாடி ஜன்னல்களின்மீது வெளிச்சம் புகுந்து விளையாடுவதையே கவனித்தபடி இருந்தவர், நாளடைவில் உருவங்கள்மீது வெளிச்சமும், நிழலும் விழுவதை மேலைநாட்டு ஓவியர்கள் எப்படியெல்லாம் கையாள்கிறார்கள் என்பதைப் பயின்றார்.

இதன் விளைவாக, மனித முகங்களை உயிரோட்டமுள்ள ஓவியங்களாகத் தீட்டுவதில் தனிப் பெயர் பெற்றார். ஆனால், இத்துடன் இவர் திருப்தியடையவில்லை. வெளிச்சம் குறித்த இவரது ஆர்வம் ஓர் ஆராய்ச்சியாக வடிவெடுத்தது!

வெளிச்சம் ஓவியமாகத் தீட்டப்படும் பொருளின்மீது ஒரே சீராக விழுந்தால் எப்படியிருக்கும் என்று சோதனை செய்து பார்த்த மேலை ஓவியர்களான மோனே, ரெனுலா ஆகியோரைப் பின்பற்றாமல், தனக்கென ஒரு தனி பாணியைக் கண்டெடுக்கப் புதிய முயற்சி ஒன்றை மேற்கொண்டார் அல்போன்சோ.

திடமான உருவம் கொண்ட வைரக்கற்களின்மீது வெளிச்சத்தைப் பாய்ச்சி, அதைப் புகைப்படங்களாக எடுத்தார். இந்தப் புகைப்பட நெகடிவ்களைப் பெரிய திரைகளில் விழச் செய்து பார்த்தபோது, அவையே ஒரு புதுவிதமான ஓவியம் போலத் தென்பட்டன. வைரங்களின்மீது விழும் வெளிச்சம் – முகம்பார்க்கும் கண்ணாடிமீது விழும் வெளிச்சம் பிரதிபலிக்கப்படுவது போலத் திருப்பி அனுப்பப்படுவதில்லை. மாறாக, வைரத்துக்குள்ளேயே இருக்கும் பல்வேறு பட்டைகளுக்குள் ஊடுருவிச் சென்று வெட்டிப் பிரிக்கப்படுகிறது. அல்போன்சோவின் பார்வையில் பொருட்களின்மீது சாதாரணமாக விழும் நிழலும், வெளிச்சமும் கலந்த நிலை சலிப்பூட்டுவதாகத் தோன்றியது. எனவே, இவர் தனது ஓவியங்களில் ஒரு புதுவிதமான வெளிச்ச நியாயத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார். இதுவே, இவரது தனி பாணியாக அமைந்துவிட்டது!


இவர், அன்றாட வாழ்க்கையிலிருந்து தனது ஓவியத்துக்கான கருப்பொருட்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தினார். மாடு மேய்க்கும் சிறுவன், தம்புரா வாசிக்கும் பெண், தாயும் குழந்தையும், கிளியுடன் காதலர்கள் என்று பலவற்றைத் தனக்கான முத்திரையுடன் ஓவியமாகத் தீட்டினார். இவரது ஓவியங்களில் சில குறியீடுகள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டன. மயிலிறகு, நிலவா... சூரியனா... நெற்றிப் பொட்டா என்று குறிப்பிட முடியாத சிவப்பு வட்டம், லாந்தர் விளக்கு, கிளி என்று சில குறியீடுகள் இவரது நவீனத்தனமான ஓவியத்துக்கு நமது மண்ணுக்கேற்ற கவிதைநயமான ஒரு தொனியை உண்டாக்குகின்றன.

இவரது கலை உன்னதம் – இவரது ஓவியங்களை 'இன்றைய இந்திய ஓவியம்' என்ற தலைப்பில் 1965-ல் லண்டனிலும், 1984-ல் கியூபா, மெக்ஸிகோ ஆகிய நாடுகளிலும் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிகளில் பங்குகொள்ள வைத்தது. அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், இந்தோனேஷியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிலும் பயணம் செய்திருக்கும் அல்போன்சோவின் தனியான ஓவியக் கண்காட்சிகள் உலகெங்கும் நடந்து வந்துள்ளன.

சர்வதேசப் பயணங்களில் இவர், பூமியைத் தவிர்த்த பிற கிரகங்களைப் பற்றிக் காண நேர்ந்த பல அருகாமைப் புகைப்படங்களும், வான்வெளிப் பற்றிய கண்காட்சிகளும் புதிய பார்வை ஒன்றை இவருக்குக் கொடுத்தது. காலம், வெளி ஆகியவை பற்றிய அறிவியல்ரீதியான கருத்துக்களினால் கவரப்பட்ட அல்போன்சோ, 1980 – 81-களில் 'காலமும் வெளியும்' எனும் ஓவிய வரிசைகளைத் தீட்டத் தொடங்கினார்.

இவற்றில் இந்திய மரபுக்கேற்ற புராணக் கதாபாத்திரங்களையும் பயன்படுத்தினார். சிவனின் ஆனந்த நடனத்தைப் பிரபஞ்ச இயக்கத்தின் குறியீடாகக் கொண்டு இவர் தீட்டிய ஓவியங்களில் மரபுரீதியாகச் சித்தரிக்கப்படும் சிவன், பல புதிய பரிமாணங்களைப் பெறுகிறார். ஓவியத்துக்குள் ஓர் அசைவை, ஓர் இயக்கத்தைத் தனது தனியான உத்திமுறை மூலமாகப் படைத்துக் காட்டுகிறார் அல்போன்சோ.

இந்த ஓவிய வரிசைக்கு அடுத்தபடியாக, 1987 – 88-களில் 'காலம், வெளி, பரிமாணம்' எனும் ஓவியங்களைத் தீட்டத் தொடங்கினார். இந்தப் படைப்புகளில் ஓவியக் கித்தானில் தீட்டிய ஓவியத்தின் ஒரு தொடர்ச்சியாகக் கனசதுரமான ஒரு வடிவத்தை உண்டாக்கி, அதன் எட்டுப் பக்கங்களிலும் ஓவியங்களைத் தீட்டி புதிய சாதனை ஒன்றைப் படைத்தார். இது இரு பரிமாண எல்லைக்குள் நிகழும் சிவ நடனத்தை நான்கு பரிமாண எல்லைக்குக் கொண்டு வந்துவிடுகிறது.




சிவதாண்டவம்...

1968-ல் சர்வதேசப் பண்பாட்டு மைய விருது, 1970-ல் காளிதாசர் தங்கப்பதக்கம், 1988-ல் நேஷனல் அகாடமி விருது ஆகியவற்றைப் பெற்ற அல்போன்சோவின் இன்றைய படைப்புகள், நவீன கலையின் புதிய எல்லைகளை நிறுவுகின்றன. இந்திய ஓவியத்துக்கு உலக அரங்கில் ஒரு இடம்பிடித்துக் கொடுக்கின்றன.

– இந்திரன்

# கார்ட்டூன் காதலி!



கார்ட்டூன் காதலியுடன் கதாநாயகன் காபிரியேல் பைன்



கார்ட்டூன் சித்திர கதாநாயகி கிம் பாஸிங்கர்

சிற்பி மிக அழகான பெண் சிலையைச் செதுக்க, திடீரென அது உயிர் பெற்று வந்து அவர்களுக்குள் காதல் மலர்வது நமது பழங்கதைகளிலேயே உண்டு. ஆனால், இது நவீன யுகம். ஆகவே, இதே கதை நவீன முறையில் படமாகிறது. இங்கல்ல... அமெரிக்காவில்! படக் கதாநாயகன் ஒரு ஓவியன். அவன் வரைந்த மிக அழகிய கார்ட்டூன் பெண் உயிர்பெற்று வந்து, அவனையே மயக்கத் தொடங்குவதுதான் கதை.

கார்ட்டூன் கதாநாயகிக்கு உயிர் கொடுக்கும் இந்தப் 'பளிச்' ஐடியாவை உருவாக்கியதும் ஒரு கார்ட்டூனிஸ்ட்தான்! 1972-ல் 'ஒருமாதிரி' படத்தை கார்ட்டூன் கதாபாத்திரங்களை வைத்து எடுத்த ரால்ப் பக்ஷிதான் அவர். கார்ட்டூன் படங்களுக்கு அப்போது மவுசு இல்லாததால் கண்டுகொள்ளப் படாமல் இருந்த பக்ஷி, இந்தப் படம் மூலம் முன்னணிக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படத்தில் கார்ட்டூன் சித்திரமாகவும், மனிதக் கதாநாயகியாகவும் தோன்றுபவர் கிம் பாஸிங்கர். 'கூல் வேர்ல்ட்' (Cool World) எனத் தலைப்பிடப்பட்டுள்ள இந்தப் படத்தின் தயாரிப்புச் செலவு எவ்வளவு தெரியுமா? நமது மதிப்பில் சுமார் எழுபத்துமூன்று கோடி ரூபாய்!